[1973 நவம்பர் 22

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்திலுள்ள எல்லா தாலுக்கா தலைநகரங்களிலுமுள்ள அரசு மருத்துவ மனைகளிலும் இரத்த சேமிப்பு நிலையம் இல்லாத காரணத்தால் நோயாளிகளுக்கு இரத்தம் கொடுக்க இயலாமல் அவர்கள் உயிரிழக்க நேரிடுகிறது. மாயூரம் மருத்துவ மனையில் இரண்டு மூன்று பேர் இப்படிப்பட்ட காரணத்தால் இறந்து விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, தாலுக்கா தலைநகரங்களிலுள்ள அரசு மருத்துவ மனை ஒவ்வொன்றிலும் கட்டாயம் இரத்த சேமிப்பு நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தாலுக்கா மருத்துவ மனைகளில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. படிப்படியாக ஓராண்டுக்கு நான்கு அல்லது ஐந்து இடங்களில் இந்த இரத்த சேமிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. ஏற்படுத்தப்பட்ட ஒன்றிரண்டு இடங்களில் சில சிக்கல்கள் காரணமாக அந்தப் பணி சரியாக நடைபெறவில்லை. அவைகளைச் செம்மைப்படுத்தவேண்டுமென்று இயக்குநருக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

திருநெல்வேலி மருத்துவ மனையில் மருந்துகள் இருப்பு

*** 305 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டையில் உள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் போதுமான குளுகோஸ் மற்றும் டி. வி. மருந்துகள், இன்ஸ்லின் மருந்துகள் 1973, ஏப்ரல், மே. ஜூன் மாதங்களில் இல்லாததால் ஆப்ரேஷன் கேஸ்கள் மற்றும் முக்கியமான கேஸ்கள் கவனிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அவ்விதம் பொருள்கள் தட்டுப்பாடு ஏற்படக் காரணம் யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இல்லை.

1973 நவம்பர் 22]

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : *தலைவர் அவர்களே, இப்படி மருத்துவ மனைக்கு ஒதுக்கப்படும் மருந்துகள் வெளியே கடத்தப் படுவதாக அரசுக்குப் புகார் வந்ததா? அப்படியானால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?*

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : *தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, மருந்துகள் கடத்தப்படுவதைப்பற்றியதல்ல. மருத்துவ மனைக்குத் தேவையான மருந்துகள் 1973 ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இல்லாததால், அங்கே அவர்களுக்குச் சரியான சப்ளை இல்லாததால் மருந்து கிடைக்கவில்லை என்று கேட்கப்பட்டிருக் கிறது. எந்தெந்த மருந்துகள் அவர்களிடத்தில் அந்த நேரத்தில் தேவையான, அவசியமான அறுவை சிகிச்சை போன்ற பணிகளுக் காக இருந்தன என்பதற்கான புள்ளி விவரம் கிடைத்திருக்கிறது. பெரும்பாலான மருந்துகள் அவர்களிடத்தில் போதுமான அள வுக்கு இருந்தன. எண்ணிக்கை அளவில், ஓராண்டுத் தேவையின் அளவில் சற்று குறைவாக இருந்தன. அவை குறைவாக இருந் தனவே தவிர, அடியோடு இல்லை என்ற நிலைமை இல்லை. அவை களுங்கூட, ஜூன் மாதம் 17-20 தேதி அளவில் அவர்களுக்கு மறுபடியும் கிடைத்திருக்கின்றன. ஆகவே, மருந்துகள் பற்றாக் குறை ஏற்பட்டு நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்குவதில் குறைவு ஏற்படக் காரணம் இல்லை என்பதுதான் இதிலே விளக்கப் பட்டிருக்கிறது. மருந்துகள் கடத்தப்படுவது பற்றி குறிப்பாக எந்த இடத்திலாவது நடைபெறுவதாக மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் தெரிவித்தால் உடனடியாக—தேவையானால் விஜி லன்ஸ் மூலமாகக் கூட—நடவடிக்கை எடுக்க அரசு முன்வரும்.*

Certificate course in Nursing

* 306 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state whether the General Body of the Nurses Association, Chingleput has passed a resolution during January 1973 requesting the Government to convert the 3 year certificate course in nursing into a diploma course and to appoint a Tutor (Grade I) at every school of Nursing?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. நா. வீராசாமி : *தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலிருக்கக்கூடிய நர்சுகள் மேல் பட்டப்படிப்பு படிக்க வேண்டுமானால் அவர்களுக்குத் தமிழ் நாட்டில் வசதி இல்லை.*